மாண்புமிகு உறுப்பினரவர்களுக்கு நன்றாகத் தெரியும் இருக்கின்ற நிதிநிலை இடம் தராது. இந்த ஆண்டு ஒரு புதிய திட்டத்தைக்கூட, வருகின்ற மானியக் கோரிக்கையிலே அறிவிக்க இருக்கிறோம். ஆகவே, வரும் ஆண்டுகளிலே இருக்கின்ற நிதியாதாரத்தை வைத்து, அந்தப் பகுதியிலே இருக்கின்ற போக்குவரத்தைப் பொறுத்து, எதற்கு முன்னுரிமை கொடுக்கலாம் என்பதைப் பரிசீலித்து இந்த அரசு நடவடிக்கையெடுக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. ஏ. தா. பொன்னுவேலு : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, கூடலூருக்கும் கொளத்தூருக்கும் உள்ள அந்தப் பாலத்தைக் கட்டுவதற்கு இயலவில்லை என்றாலும் இலுப்பக்குடிக்கும் கொளத்தூருக்கும் உள்ள அந்த ஆற்றுக்கு ஒரு பாலம் அமைத்தால் அந்தப் பகுதிக்கு மிகவும் நலமாக இருக்கும். அதை மறுபரிசீலனை செய்து அமைச்சரவர்கள் ஆவன செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே மருதை ஆற்றில் குறுக்கே கட்டப்பட வேண்டிய பாலம் சம்பந்தமாக வினாக்கள் சொல்லியிருக்கிறார்கள். அது சம்பந்தமாகத்தான் நான் பதிலுரை சொல்லியிருக்கிறேன். மாண்புமிகு உறுப்பினரவர்கள் இப்பொழுது கேட்பது இந்தப் பாலமா அல்லது வேறா என்பதைத் தெளிவுபடுத்தினால் அது குறித்து அரசு நடவடிக்கை எடுக்கும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 270 திரு. கி. தருமலிங்கம் மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர்.

270—

வரதலம்பட்டு கிராமத்தில் காட்டாற்றின் மேல் தரைப்பாலம் கட்டுதல்.

*0673—திரு. கி. தருமலிங்கம் :

மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

அணைக்கட்டு தொகுதியில் அணைக்கட்டு—ஒடுகத்தூர் (வன) கிராமப்புற நெடுஞ்சாலையில் வரதலம் பட்டு கிராமத்தின் அருகில் காட்டாற்றின் மேல் தரைப்பாலம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன் : பொதுப்பணித் துறை அமைச்சர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

தற்போதைக்குத் திட்டம் ஏதுமில்லை.

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

1993 ஏப்ரல் 7]

திரு. கி. தருமலிங்கம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அணைக்கட்டு தொகுதியில் என்.எச். 46 நெடுஞ் சாலையிலிருந்து சுமார் 20 கிலோமீட்டர் தூரத்தில் வரதலம் பட்டு கிராமம் அருகே கிரமாப்புற நெடுஞ்சாலையின் குறுக்கே ஜவ்வாது மலை காட்டாறு குறுக்கிடுகிறது. இதுவொரு முக்கிய மான கிராமப்புறச் நெடுஞ்சாலையாகும். மழைக் காலங்களில் ஒருவாரம் கூட போக்குவரத்து நின்று விடும் அளவிற்குக் காட் டாற்றில் வெள்ளம் ஓடுகிறது. அந்தப் பகுதியில் ஜவ்வாது மலை யில் வாழும் மலைவாழ் மக்களும், பிற்படுத்தப்பட்ட விவசாய பெருமக்களும் நிரம்பப் பேர் இருக்கிறார்கள். அதன் காரண மாகத்தான், மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் அவர் கள், 4 மாதங்களுக்கு முன்னால், இதுவரை பாதையே இல்லாது இருந்த அந்தப் பகுதியில், தார்ச் சாலையை அமைத்துக் கொடுத் தார். நன்றிப் பெருக்கோடு அதற்கு நன்றி கூறிக் கொண்டு அதே நேரத்தில் அங்கு காட்டாறு குறுக்கிடுவதால், பேருந்துகள் போக வர இயலாமையின் காரணமாக, அந்தப் பாதை அவ்வப் போது தடைபடுகிறது. எனவே, மாண்புமிகு அமைச்சர் அவர் கள்—அதிலே இன்னொன்றும் குறிப்பிட விரும்புகிறேன்—மாவட்ட வளர்ச்சி மன்றக் கூட்டத்திலே, அந்த இடத்திலே பாலம் கட்டு வதற்கு கோப்பு தயார் செய்யப்பட்டு, அது அரசுக்கு வந்துள்ளது. ஆனால், இப்போது என்னிடத்திலே அந்தக் கோப்பு எண் இல்லை, எனவே, மாண்புமிகு அமைச்சர் பெருமகனார், அந்தப் பாலத் தைக் கட்டிக் கொடுக்க வேண்டுமாறும், அதை எப்போது கட்டிக் கொடுப்பார் என்பதையும் அவர் மூலமாக அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10–35

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சட்டமன்றப் பேரவை வினாவிலே குறிப்பிடப்பட்ட அந்தப் பாலத்தினுடைய மதிப்பு ஏறத்தாழ உயர்மட்ட பாலம் கட்ட $1\frac{1}{2}$ கோடி ரூபாய் ஆகிற தரைப் பாலம் கட்ட ரூ. 55 இலட்சம் என்றிருக்கிறது. அரசுக்கு இருக் கிற பிரச்சினையே, இந்தப் பகுதியில் போக்குவரத்து மழைக் காலங்களில் தடைபடுகிற பிரச்சினை, இந்த அரசுக்கு நன்றாகத் தெரியும். அதற்கான திட்டத்தினை வளர்ச்சி மன்றக் கூட்டத் திலே இருந்து அனுப்பியிருக்கிறார்கள். அரசுக்கு அது வந்திருக் கிறது. அதற்கான எஸ்டிமேட் தயார் செய்யப்பட்டு, இன் றைக்கு கையிலே இருக்கிறது. ஆனால், இருக்கிற பிரச்சினை எல்லாம், நிதி ஒதுக்குவதிலேதான் பல சங்கடங்கள். ஆக, ஒவ் வொரு தொகுதியிலும் பல்வேறு பாலங்கள் கட்டவேண்டும் என் பது, இந்த அரசுக்கு நன்றாகத் தெரியும். ஆகவேதான் எந்த சாலைகளிலே அதிகமாக போக்குவரத்து நடைபெறுகிறதோ, அவற்றுக்கு முன்னுரிமை கொடுத்து அந்தப் பகுதியிலே இருக்கிற பாலங்களை, சாலைகளை சீரமைத்துக் கொண்டிருக்கிறோம். இங்கேயுள்ள சாலையைப் பொறுத்தவரை, மாண்புமிகு உறும்

பினர் அவர்கள் சொன்னதைப் போல, அங்கே சாலையைக் கட்டிக் கொடுத்தோம். இப்போது, பாலம் கேட்கிறார். அவருடைய கோரிக்கை நியாயமானது. இருக்கிற நிதியாதாரத்தைப் பார்க்கும்போது, அதிகமான செலவினங்கள் இருக்கிற காரணத்தினாலேதான் இப்படிப்பட்ட திட்டங்களை உடனடியாக எடுக்க முடியவில்லை. ஆகவேதான், "Central Road Fund" என்று சொல்லப்படுகிற திட்டத்திலே, மைய அரசால் ஒதுக்கப்படுகிற திட்டங்களில் எல்லாம் பெரிய பெரிய பாலங்களை எடுக்கிறோம்; அவை போன்றவைகளிலே இதையும் பரிந்துரை செய்ய முடியுமா; அவ்வாறு செய்து அனுப்ப முடியுமா என்பதையெல்லாம் அரசு ஆய்வு செய்து வருகிறது. எப்படியும் இப்படிப்பட்ட பாலங்களைக் கட்டுவதற்கு ஏதாவது ஒரு திட்டத்திலே வழி செய்யலாமா என்பதை அரசு ஆய்வு செய்து வருகிறது. ஆகவே, அது குறித்து பரிசீலித்து விரைவில் முடிவெடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. கி. தருமலிங்கம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்களுக்குப் பணிவான வேண்டுகோள். அதே பாலத்தைத் திட்ட மதிப்பீடு செய்யும்போது, அங்கே இருக்கும் பொறியாளர் அவர்கள், 9 இலட்சம் ரூபாய் அளவிலே கோப்பு தயார் செய்யப்பட்டுள்ளது என்பதை என்னிடத்திலே நேரடியாகத் தெரிவித்தார்கள். ஆனால், இங்கே வரும்போது 55 இலட்சம் ரூபாய் என்று மிகைப்படுத்தி அந்தச் கோப்பு வருகிறது. எனவே, அதுபோன்ற ஒரு தவறான நிதி மதிப்பீட்டை அனுப்பியதாகக் காண்பிக்கும்போது, தங்களால் செய்ய முடியாமல்இருக்கும் நிலைமையும் எங்களுக்குத் தெரிகிறது. நாங்கள் எல்லாம் உங்களை வேண்டுவது அதற்கு உரிய மதிப்பீட்டை ஏற்று, குறைவான மதிப்பீட்டைதரைப்பாலம் கட்ட, மேம்பாலம் தேவையில்லை; தரைப்பாலமாக அந்தக் காட்டாற்றின் மேலே கட்டிக் கொடுத்தால் அந்தப் பகுதியிலுள்ள மலைவாழ் மக்களுக்கு, போக்குவரத்திற்கு சௌகரியமாக இருக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். தாங்கள் இட்ட அந்தப் பாதையின் வழியாகத்தான் மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள், புரட்சித்தலைவி அவர்கள் ஆட்சிக்காலத்திலே, 6 மாதங்களில் 3 பேருந்துகளை விட்டிருக்கிறார்கள். தாங்களும் அணைச்கட்டுத் தொகுதிக்கு ஏறத்தாழ 55 கிலோ மீட்டர் தார்ச்சாலையை, எந்தக் காலத்திலும் இல்லாத அளவுக்கு தந்திருக்கிறீர்கள். அந்த நன்றிப் பெருக்குதலோடு, தாங்கள் ஏற்கெனவே அறிவித்த ஒரு தொகுதிக்கு ஒரு தரைப் பாலம் என்று அறிவித்த அரசுத் திட்டத்தின் வாயிலாக, இந்தப் பாலத்தையும் எடுத்துக் கொண்டு எங்களுக்கு உடனடியாக அந்தப் பாலத்தைக் கட்டித் தருவீர்களா என்பதை அன்போடு கேட்க விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெரிவிக்கிறபோது, மதிப்பீட்டைப் பற்றிச் சொன்

னார்கள். அது தவறான தகவலாகும். ஒரு தரைப் பாலம் கட்ட 110 மீட்டர் நீளமுள்ளதை 9 இலட்சம் ரூபாயிலே எப்படிக் கட்ட முடியும் என்பதை அவர்தான் விளக்க வேண்டும். அதற்குச் செலவாகிற தொகை, அதிகாரிகள் கணக்குப் போடுகிறபோது, அதனுடைய நீளம், அதற்குரிய பொருள்கள் எல்லாவற்றையும் கணக்கு செய்துதான் எஸ்டிமேட் தயாரிக்கிறார்கள். உறுப்பினர் சொன்னதைப் போல அல்ல. உறுப்பினருக்குத் தவறான தகவல் தரப்பட்டிருக்கலாம். அரசுக்கு வருகிற தகவல் தவறான தகவலாக இருக்காது. 110 மீட்டர் நீளமுள்ள ஒரு பாலம் அமைப்பதற்கு 9 இலட்சம் ரூபாய் என்று சொன்னால், அதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களே ஏற்று கட்டுவதானால், அதை இந்த அரசு உடனடியாகத் தருவதற்குத் தயாராக இருக்கிறது.

ஆகவே உறுப்பினர் அவர்கள் சரியான தகவலைத் தெரிந்து கொண்டு, அவையிலே பேச வேண்டுமென்று முதலிலே கேட்டுக் கொள்கிறேன். மதிப்பீடு செய்கிறபோது, உறுப்பினர் சொன்னதைப்போல குறைந்த மதிப்பீட்டைச் செய்திருக்க முடியாது. அதற்கு என்று இலக்கை வைத்திருக்கிறார்கள்; அதற்கெல்லாம் 'ரேட்' வைத்திருக்கிறார்கள். அந்த அளவிலேதான் அரசு போட முடியும். 'டிசைன்ஸ்' டிபார்ட்மென்ட் இருக்கிறது. அந்த 'டிசைன்ஸ்' டிபார்ட்மென்ட்டிலே அப்ரூவ்டு ரேட் இருக்கிறது. இதையெல்லாம் வைத்துத்தான் செய்ய முடியுமே, தவிர, நாம் சொல்வதைப் போல ஏதோ ஒரு குத்து மதிப்பு என்று கிராமங்களில் சொல்வார்களே அந்த மாதிரி போட முடியாது. ஆகவே (Technical Opinion) ஐப் பெற்றுத்தான் போட முடியும். ஆகவே அந்த மதிப்பீடு செய்வது சம்பந்தமாக அவர் சொல்லியது தவறான கருத்து என்று நான் தெரிவித்துக் கொள்கிறேன். முறைப்படி மதிப்பீடு தரைப்பாலம் கட்டுவதற்கு 55 இலட்சம் ரூபாயும், உயர்மட்டப் பாலம் கட்டுவதற்கு $1\frac{1}{2}$ கோடி ரூபாயும் வேண்டுமென்று அரசுக்கு விண்ணப்பித்து இருக்கிறார்கள். அரசினிடத்திலே நிதி இருக்குமானால் இதுபற்றிப் பரிசீலிக்கலாம் என்று தெரிவித்து இருக்கிறார்.

முற்பகல் 10-40.

ஆகவே, இப்பொழுது இருக்கின்ற பிரச்சினையெல்லாம் பணம் ஒதுக்குவதிலேதான். பாலத் திட்டம் என்று சொன்னார்கள். மானியக் கோரிக்கையில் இதுபற்றி விளக்கமாகச் சொல்ல இருக்கின்றோம். ஆகவே, ஒரு பாலத்திற்கு எவ்வளவு பணம் ஒதுக்கப் போகிறோம் என்பதெல்லாம் பின்னாடி உள்ள பிரச்சினை. நான் ஏற்கனவே சொல்லியிருக்கிறேன். போக்குவரத்து முன்னுரிமை அடிப்படையிலே எந்தப் பகுதியிலே அதிகமான போக்குவரத்து நடைபெறு

கிறதோ அதையெல்லாம் கணக்கிலே எடுத்துக்கொண்டு பாலங்கள் கட்டவெண்டுமென்று திட்டங்களை வைத்திருக்கிறோம். அந்த அடிப்படையிலே அரசு இதைப் பரிசீலிக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். இந்தச் சாலையினுடைய முக்கியத்தையும் இந்த அரசு நன்றாக அறியும் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண். 271, திரு. தி. சாத்தையா, மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர்.

271—

புத்தூர் மலைக்குச் செல்லும் கிராமச் சாலையைப் பழுது பார்த்தல்.

* 11808—திரு. தி. சாத்தையா :

மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

இராஜபாளையம் தொகுதி, புத்தூர் கிராமத்திலிருந்து புத்தூர் மலைக்குச் செல்லும் கிராமச் சாலையைப் பழுது பார்க்க அரசு நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன் : பொதுப்பணித்துறை அமைச்சர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

திட்டம் ஏதும் பரிசீலனையில் இல்லை.

திரு. தி. சாத்தையா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தக் கேள்வியை 1991 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 21 ஆம் தேதி கேட்டேன். 1992 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 21 ஆம் தேதிக்குள் இந்த ரோடை அமைத்துக் கொடுத்து நல்லபடியாக இப்பொழுது பஸ்கள் போய்க் கொண்டிருக்கின்றன. இதை நல்லபடியாகச் செய்து கொடுத்த புரட்சித் தலைவியின் அரசுக்கும், மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் அவர்களுக்கும் என்னுடைய தொகுதி மக்கள் சார்பாகவும் எனது சார்பாகவும் நன்றியைத் தெரிவித்துக் கொண்டு இந்த ரோடு கன்ஸ்டிரக்ஷன் மெத்தேடில் (Whether our Government will come forward . . . .

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY சட்டமன்றப் பேரவை வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS